அறிவித்தல் : கவிஞர் பிரம்மராஜன் பற்றியதொரு தொகுப்பு !

Written by - லதா ராமகிருஷ்ணன் -
Saturday, 20 February 2016 01:07 - Last Updated Saturday, 20 February 2016 01:12

தரமான படைப்பாளியை அவர் வாழும் காலத்திலேயே அங்கீகரித்து மரியாதை செய்வதுதான் அவருக்கு நாம் செய்யக்கூடிய குறைந்தபட்ச மரியாதை. எனவே, கவிஞர் பிரம்மராஜனை நவீன தமிழ்க் கவிதை இயக்கத்தின் முன்னோடிகளில் குறிப்பிடத்தக்க ஒருவராக நம்பும் நானும் சில நண்பர்களும் ஒரு கவிஞராக மொழிபெயர்ப்பாளராக, சிற்றிதழாசிரியராக, அவருடைய பங்களிப்பை எடுத்துக்காட்டும் கட்டுரைகளடங்கிய தொகுதி ஒன்றைக் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். ஆர்வமுள்ள எவரும் மார்ச் 31ஆம் தேதி வரை கட்டுரைகள் அனுப்பலாம். நூலின் பிரதிகள் ஐந்து கட்டுரையாளருக்குத் தரப்படும். மின்னஞ்சல் முகவரி: ramakrishnanlatha@yahoo.com)

1 / 1